# வணிகவரி மற்றும் பதிவுத்துறை

## மானியக் கோரிக்கை எண். 10

## வணிகவரிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு

# 2010–2011

**திரு சி.நா.மீ. உபயதுல்லா**
வணிகவரித்துறை அமைச்சர்

(C)
தமிழ்நாடு அரசு
2010

# வணிகவரி மற்றும் பதிவுத்துறை

# மானியக் கோரிக்கை எண். 10

# வணிகவரிகள்

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2010–2011

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

– திருக்குறள்

(பொருள் : குடிமக்களை அன்புடன் அரவணைத்து ஆட்சி செய்கின்ற அரசனை உலகம் பின்பற்றி வாழும்)

**முன்னுரை**

தமிழகத்தை வளர்ச்சியடைந்த செழிப்பான மாநிலமாக மாற்றும் முயற்சியில் அரசு பெரும் எண்ணிக்கையில் வளர்ச்சித் திட்டங்களையும் நலத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. அரசின்

திட்டங்களை நிறைவேற்ற தேவையான நிதி ஆதாரங்களை திரட்டுவதில் வணிகவரித்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலத்தின் வருவாயில் ஏறத்தாழ 70 சதவீதம் வணிகவரிகள் மூலம் ஈட்டப்படுகிறது. உலக அளவிலான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக சென்ற ஆண்டில் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியில் பின்னடைவே நிலவியது. மேலும், சாதாரணப் பொதுமக்களின் நலன் கருதி இந்த அரசு அத்தியாவசிய வீட்டு உபயோகப் பொருட்கள் பலவற்றிற்கு வரி விலக்கு அளித்தது. இருப்பினும், புதிய வரி விதிப்போ அல்லது வரி உயர்வோ ஏதுமின்றி வணிகவரித்துறை 2009–2010ஆம் ஆண்டில் ரூ.24,819 கோடி வரி வசூல் செய்துள்ளது. இது முந்தைய ஆண்டை விட ரூ.2,249 கோடி அதிகமாகும்.

## 2. துறையின் அமைப்பும் செயல்பாடுகளும்

இத்துறையில், பல்வேறு வரிச் சட்டங்களை அமல்படுத்தி வருவாய் ஈட்டித் தருவதற்கு மாநிலம் முழுவதும் சிறந்த முறையில் சார்நிலை அலுவலகங்கள் அமைந்துள்ளன.

வணிகவரித் துறையின் நிர்வாகம், வணிகவரி ஆணையர் அவர்கள் தலைமையில் இயங்கி வருகிறது. ஆணையருக்கு உதவியாக தலைமையகத்தில் 5 கூடுதல் ஆணையர்கள், 3 இணை ஆணையர்கள், ஒரு இணை இயக்குநர் (புள்ளியியல் & ஆய்வு), 5 துணை ஆணையர்கள், மற்றும் 6 நிர்வாக அலுவலர்கள் உள்ளனர். இந்தத் துறையின் பணிகள், பணியின் தன்மையின் அடிப்படையில் துறையிலுள்ள பல்வேறு பிரிவுகளுக்கு பிரித்து வழங்கப்பட்டுள்ளன.

### 2.1 வரிவிதிப்புப் பிரிவு

வரிவிதிப்புப் பிரிவில் உதவி ஆணையர், வணிகவரி அலுவலர், மற்றும் உதவி வணிகவரி அலுவலர் ஆகியோர் வரிவிதிப்பு அலுவலர்களாக உள்ளனர். மாநிலத்தில் மொத்தம் 323 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. அவற்றில் 236 வட்டங்களுக்கு உதவி ஆணையர் தலைமை அலுவலராகவும், 81 வட்டங்களுக்கு வணிகவரி அலுவலர் தலைமை அலுவலராகவும் உள்ளனர். சென்னையில் நான்கும்,

கோவையில் இரண்டும் ஆக ஆறு விரைவு வழி வரிவிதிப்பு வட்டங்கள் துணை ஆணையர்களைத் தலைமை அலுவலராகக் கொண்டு இயங்குகின்றன. வரிவிதிப்பு அலுவலர்களின் பணி, மாவட்ட /சரக அளவில் துணை ஆணையர்களாலும், கோட்ட அளவில் இணை ஆணையர்களாலும் கண்காணிக்கப்படுகிறது.

## 2.2 தணிக்கைப் பிரிவு

ஒவ்வொரு வணிகவரி மாவட்டத்திலும் உதவி ஆணையர் ஒருவர் மற்றும் வணிகவரி அலுவலர் ஒருவர் கொண்ட உள் தணிக்கைக் குழு வரி விதிப்புப் பிரிவு துணை ஆணையரின் கீழ் செயல்படுகிறது. வரி விதிப்புப் பிரிவு இணை ஆணையரால் வகுத்தளிக்கப்படும் நிகழ்ச்சி நிரலின்படி தணிக்கைக் குழு ஒவ்வொரு காலாண்டிற்குரிய, வரிவிதிப்பு ஆணைகள், வருவாய் வரவுகள், திருப்பியளித்த இனங்கள் ஆகியவற்றில் தணிக்கை மேற்கொள்கிறது. தணிக்கைப் பகுதிகளின் மீதான குறை நிவர்த்திப் பணிகளை சம்பந்தப்பட்ட வரிவிதிப்புப் பிரிவு துணை ஆணையர் மற்றும் இணை ஆணையர் கண்காணிக்கின்றனர்.

இது தவிர, வரிவிதிப்பு மற்றும் வரி திரும்ப அளித்தல் தொடர்பாக ஆண்டுக்கு ஒரு முறை மாநிலக் கணக்காயரால் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதன் மீது குறை நிவர்த்தி

செய்ய வேண்டிய முக்கிய பணி, வரிவிதிப்பு அலுவலர்களிடம் உள்ளது. இந்த முக்கிய பணி மாநில அளவில் ஆணையர் அலுவலகத்தில் உள்ள கூடுதல் ஆணையர் (தணிக்கை) அவர்களால் கண்காணிக்கப்படுகிறது.

## 2.3 மேல்முறையீட்டுப் பிரிவு

மேல்முறையீட்டு துணை ஆணையர்/இணை ஆணையர் முதல் முறையீட்டுக்கான அலுவலர் ஆவார். மாநிலம் முழுவதிலும் இருபது மேல்முறையீட்டு துணை ஆணையர்களும், இரண்டு மேல்முறையீட்டு இணை ஆணையர்களும் உள்ளனர். ஒவ்வொரு மேல்முறையீட்டு அலுவலர் முன்பும் துறை சார்பாக வாதிடுவதற்கு, உதவி ஆணையர் நிலையில் ஒரு துறைப் பிரதிநிதி நியமிக்கப்பட்டுள்ளார். விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் இரண்டாவது மேல்முறையீடு செய்யப்படுகிறது. சென்னையில் முதன்மைத் தீர்ப்பாயமும், சென்னை, கோவை மற்றும் மதுரையில் கூடுதல் தீர்ப்பாயங்களும் உள்ளன. துறை சார்பாக வாதிடுவதற்கு முதன்மைத் தீர்ப்பாயத்தில் இணை ஆணையர் நிலையில் மாநில பிரதிநிதியும், கூடுதல் தீர்ப்பாயங்களில் துணை ஆணையர் நிலையில் கூடுதல் மாநில பிரதிநிதிகளும் உள்ளனர்.

## 2.4 செயலாக்கப் பிரிவு

மாநிலத்தில் ஏழு செயலாக்கப் பிரிவு கோட்டங்கள் இணை ஆணையர்களின் கட்டுப் பாட்டில் இயங்குகின்றன. இது தவிர, இணை ஆணையர் தலைமையில் இடை மாநில புலனாய்வுக் குழு ஒன்றும் செயல்படுகிறது.

செயலாக்கப் பிரிவில், பத்து துணை ஆணையர்களும், பதினான்கு உதவி ஆணையர்களும் உள்ளனர். துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையரின் கீழ் வணிகவரி அலுவலர் மற்றும் உதவி வணிகவரி அலுவலர் அடங்கிய குழு அலுவலர்கள் உள்ளனர். மேலும், சுற்றும் படை, இரயில் சரக்கு போக்குவரத்து நிலையங்கள் மற்றும் சரக்குக் களங்கள் ஆகியவற்றில் செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

வரி ஏய்ப்பினை கண்டு பிடிக்கும் பொருட்டு செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் கடைத் தணிக்கைப் பணியில் ஈடுபடுகின்றனர். மேலும், வணிகவரி ஆணையரின் அனுமதி பெற்ற பின், மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் கணக்குகளை தணிக்கை செய்ய வணிகர்களுக்கு முன் அறிவிப்பு கொடுத்த பின்பு, செயலாக்கப் பிரிவு அலுவலர்களால் வணிக இடங்களில் கணக்குகள் தணிக்கை செய்யப் படுகின்றன. சுற்றும் படை, இரயிலக மற்றும்

சரக்குப்பிரிவுகளில் பணிபுரியும் அலுவலர்கள், வாகனத் தணிக்கையின் மூலம் பெறப்படும் விலைப்பட்டிகள் மற்றும் இதர போக்குவரத்து ஆவணங்கள் ஆகியவற்றை, உரிய வணிகர்கள் வைத்துள்ள கணக்குகளுடன் சரிபார்ப்பதன் மூலம் வரி ஏய்ப்பினை தடுக்கின்றனர். இடைமாநில புலனாய்வுக் குழு அலுவலர்கள், பிற மாநிலங்களில் இருந்து வணிக நடவடிக்கை விவரங்களைப் பெற்று இம்மாநில வணிகர்களின் கணக்குகளுடன் சரிபார்க்கின்றனர்.

## 2.5 தணிக்கைச் சாவடிகள்

மாநில எல்லையில், இருபத்தெட்டு தணிக்கைச் சாவடிகளும், மாநிலத்திற்குள் ஒரு தணிக்கைச் சாவடியும் உள்ளன. மாநில எல்லைத் தணிக்கைச் சாவடிகளில், பெரிய தணிக்கைச் சாவடிகளாக பதினைந்தும், சிறிய தணிக்கைச் சாவடிகளாக பதின்மூன்றும் உள்ளன. உள் தணிக்கைச் சாவடி பெரிய தணிக்கைச் சாவடி ஆகும். உதவி வணிகவரி அலுவலர்கள் சோதனைச் சாவடி அலுவலர்களாகவும், உடன் பணிபுரிய உயர் பிரிவு ஆய்வாளர்கள், பதிவுரு எழுத்தர்கள், அலுவலக உதவியாளர்கள், பளுதூக்குபவர்கள் ஆகியோரும் உள்ளனர். ஐந்து பெரிய எல்லைத் தணிக்கைச் சாவடிகளில் உதவி ஆணையர்கள் தலைமை அலுவலர்களாக உள்ளனர். தணிக்கைச் சாவடிகளுக்கு ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கான

மேசை, அறைகலன்கள், பெயர்ப் பலகைகள் ஆகியவற்றை அளித்து, கட்டட மற்றும் மின் பராமரிப்பு வேலைகள் செய்து தரப்பட்டுள்ளன. தணிக்கைச் சாவடிகளைக் கடந்து செல்லும் வாகனங்கள் மற்றும் அவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் குறித்த விவரங்களைப் பதிவு செய்வதற்காக, தணிக்கைச் சாவடிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. முக்கியமான சோதனைச் சாவடிகளில் கண்காணிப்பு நிழற்படக் கருவிகள் பொருத்தப்பட்டு, மத்திய கண்காணிப்பு அமைப்போடு இணைக்கப்பட்டுள்ளன.

## 3. வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம்

வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம், 1982ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. வணிகவரித் துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வணிகவரி சம்பந்தமான அனைத்து சட்டங்கள் குறித்த நடப்பு தகவல்களுடன் பயிற்சியளிப்பது இப்பயிற்சி நிலையத்தின் முக்கிய நோக்கமாகும். இத்துறையின் அலுவலர்களுக்கான பயிற்சியின் தேவையை ஆராய்ந்து, தற்கால வளர்ச்சிக்கு உகந்ததாகவும், எதிர்கால சவால்களை சமாளிக்கும் விதமாகவும் உகந்த பயிற்சி நிரல்கள் உருவாக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்படுகின்றது. மேலும், வணிகவரித்துறை கணினிமயமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து, துறையின் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கணினியை

உரிய முறையில் பயன்படுத்த செயல்முறைப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. சிறப்பு விரிவுரையாளர்களைக் கொண்டு பல்வேறு தலைப்புகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சி நிலையம், இணை ஆணையர் ஒருவரை இயக்குநராகக் கொண்டு இயங்குகிறது. பயிற்சி நிலையத்தில் பயிற்சிகள் அனைத்தும், துணை ஆணையர் பணி நிலையில் உள்ள இரு முதுநிலை விரிவுரையாளர்கள், உதவி ஆணையர் நிலையில் ஒரு விரிவுரையாளர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சி நிலையத்தில் துறை அலுவர்களுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன :

- வரிவிதிப்புக் கோட்பாட்டின் அடிப்படைப் பயிற்சி
- பணியிடைப் பயிற்சி
- கணினிப் பயிற்சி
- மதிப்புக் கூட்டு வரிப் பயிற்சி

மேலும், இந்தப் பயிற்சி நிலையம், அமைச்சுப் பணியாளர்களுக்கு துறை தொடர்பான கணினிப் பயிற்சி, அகஇணையதளம், இணையதளம் மற்றும்

மின் அஞ்சல் தொடர்பான செயல்முறை பயிற்சியும் வழங்கி வருகிறது.

மேலும், இப்பயிற்சி நிலையத்தின் கிளைகள் வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய கோட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு மாநிலம் முழுவதும் அனைத்து அலுவலர்களுக்கும் ஒரே நேரத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், 'டின்எக்ஸிஸ்' (TINXSYS) மற்றும் மாதாந்திர அறிக்கைகள் கூர்ந்தாய்வு செய்தல் தொடர்பான கணினி வழி பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

## 4. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

தலைமையிடத்தில் உள்ள புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, புள்ளியியல் இணை இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு இளநிலை ஆராய்ச்சி அலுவலரும் மற்றும் ஒவ்வொரு வணிகவரி சரகம் / மாவட்டத்திலும் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் பணிபுரிந்து வருகின்றனர்.

இப்பிரிவில் கீழ்க்கண்ட அறிக்கைகள் மற்றும் வெளியீடுகள் தயாரித்து வெளியிடப்படுகின்றன:

1. "வணிகவரித் துறை – ஒரு கண்ணோட்டம்" எனும் கையேடு

2. வணிகவரித்துறை – முக்கிய குறியீடுகள் (மடிப்புத் தாள்)
3. காலத்தொடர் அறிக்கை – வணிகவரித் துறையின் புள்ளி விவரத் தொகுப்பு
4. அனைத்துக் கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் 100 பெரு வணிகர்களின் வருவாய் பற்றிய ஆய்வறிக்கை.
5. அனைத்துக் கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் அதிக வருவாய் ஈட்டும் பொருட்கள் குறித்த ஆய்வறிக்கை.
6. சட்ட வாரியான மற்றும் கோட்ட வாரியான வருவாய் அறிக்கை.
7. கோட்ட அளவிலான மாதாந்திர முன்னேற்ற அறிக்கை.
8. பொருள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வரி ஏய்ப்பினை மதிப்பீடு செய்தல்.
9. வரி ஏய்ப்பு அதிகம் காணப்படும் பொருட்கள் குறித்த அறிக்கைகள்.
10. மதிப்புக் கூட்டு வரிக்கு உட்பட்ட சுமார் 260 பொருட்களின் விலை மாற்றம் குறித்து ஆய்வு செய்து, அவற்றை கண்காணித்து, அறிக்கை தயாரித்து, விலைகள் மீதான மதிப்புக் கூட்டு வரியின் தாக்கத்தை மதிப்பீடு செய்தல்.

## 5. வணிகவரித் துறையில் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

வணிகவரித் துறை கீழ்க்கண்ட சட்டங்களை நிர்வகித்து, வரி வசூலிப்பதைச் செயல்படுத்துகிறது :

1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 (31.12.2006 வரை)
2. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970 (31.12.2006 வரை)
3. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 (1.1.2007 முதல்)
4. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
5. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939
6. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983
7. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
8. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981

9. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச் சட்டம்,1990


10. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001 (இந்த சட்டம் செல்லாது என சென்னை உயர்நீதிமன்றம் தனது 23.3.2007 நாளிட்ட தீர்ப்பில் ஆணையிட்டது – இதன் மீது மேல்முறையீடு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது)


## 6. கடந்த ஆண்டுகளோடு வரி வருவாய் ஒப்பீடு

கடந்த ஆண்டுகளில் அனைத்து சட்டங்களின் கீழ் ஈட்டிய வருவாய் விவரம் வருமாறு:

| ஆண்டு | வருவாய் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி விகிதம் |
|---|---|---|
| 2004–2005 | 13908 | 18 .29% |
| 2005–2006 | 16615 | 19.47% |
| 2006–2007 | 19217 | 15.66% |
| 2007–2008 | 19952 | 3.83% |
| 2008–2009 | 22570 | 13.12% |
| 2009–2010 | 24819 | 9.96% |

# வருவாய் ஒப்பீடு – வரைபடங்களில்



## 7. கடந்த ஆண்டுகளின் சட்டவாரியான வருவாய் ஒப்பீடு

சட்டவாரியாக வருவாய் விவரம் வருமாறு :–

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | சட்டம் | 2004–2005 | 2005–2006 | 2006–2007 | 2007–2008 | 2008–2009 | 2009–2010 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் | 11462 | 13658 | 13416 | 429 | 293 | 218 |
| 2. | தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் | –– | –– | 2290 | 16472 | 19440 | 21477 |
| 3. | மத்திய விற்பனை வரிச் சட்டம் | 1495 | 1799 | 2033 | 1744 | 1653 | 1773 |
| 4. | கேளிக்கை வரிச் சட்டம் | 59 | 44 | 25 | 16 | 12 | 13 |
| 5. | பந்தய வரிச் சட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 | 7 |
| 6. | ஆடம்பர வரிச் சட்டம் | 78 | 92 | 128 | 160 | 170 | 169 |
| 7. | நுழைவு வரிச் சட்டம் (வாகனம் மற்றும்பொருட்கள்) | 808 | 1016 | 1319 | 1125 | 996 | 1162 |
| | மொத்தம் | 13908 | 16615 | 19217 | 19952 | 22570 | 24,819 |

## 8. வருவாயும் செலவும்

வணிகவரித் துறையின் வருவாய் மற்றும் செலவு விவரங்கள் வருமாறு :—

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | தலைப்பு | 2004–2005 | 2005–2006 | 2006–2007 | 2007–2008 | 2008–2009 | 2009–2010 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | வரிவருவாய் | 13908 | 16615 | 19217 | 19952 | 22570 | 24819 |
| 2. | செலவுகள் | 102.34 | 110.44 | 128.52 | 143.73 | 187. 27 | 205.10 |
| 3. | செலவின் விழுக்காடு | 0.74% | 0.66% | 0.79% | 0.72% | 0.83% | 0.83% |

## 9. மதிப்புக் கூட்டு வரி

நமது மாநிலத்தில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், **1959** நீக்கப்பட்டு, மதிப்புக் கூட்டு வரி முறை **1.1.2007** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக வணிகர்கள் மற்றும் தொழிலகங்களுக்கு பத்திரிக்கைகள் மற்றும் ஊடகங்கள் மூலமாக மதிப்புக்கூட்டு வரி முறை தொடர்பான வழிமுறைகள் மற்றும் செயல்முறைகள் குறித்து விளக்கங்கள் அளிக்கப்பட்டன. மதிப்புக் கூட்டு வரி முறை, வணிகர்கள் மற்றும் தொழிலகங்களுக்கு மிகவும் நன்மை அளிப்பதாகவும்

ஒளிவு மறைவு அற்றதாகவும் இருப்பதால் அவர்கள் இந்த முறையை பெரிதும் வரவேற்றுள்ளனர். மதிப்புக் கூட்டு வரிக்காக **“www.tnvat.gov.in”** என்னும் புதிய வலைதளம் டிசம்பர், **2006** முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வலைதளத்தின் மூலம் வணிகர்களுக்கு தேவையான அனைத்து தகவல்களும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. வணிகர்களின் நலன் கருதி, இந்தத் துறையில் மின்னணு மூலம் மாதாந்திர அறிக்கைகள் தாக்கல் செய்தல், வரி செலுத்துதல் போன்ற வசதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

## 10. 2010–2011–ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வரிச் சலுகைகள்

இந்த அரசு, ஒவ்வொரு ஆண்டும், நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக, வரி தொடர்பான கோரிக்கைகள் மற்றும் வரி நிர்வாகம் குறித்த முறையீடுகள் மற்றும் குறைகளைத் தெரிந்து கொண்டு செயல்பட ஏதுவாக, தொழில் மற்றும் வணிகப் பிரதிநிதிகளின் கூட்டத்தை நடத்தி வருகிறது. இந்த ஆண்டும், **1.3.2010** அன்று இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில், பல்வேறு வணிக சங்கங்கள் மற்றும் தொழில் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கோரிக்கைகளை முன்வைத்தனர். அவர்களின் கோரிக்கைகளின்

அடிப்படையில் நுகர்வோர், வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு பயன்தரும் வகையில் நிதிநிலை அறிக்கையில் மதிப்புக் கூட்டு வரி தொடர்பாக பல்வேறு வரிச்சலுகைகள் அறிவிக்கப்பட்டன. மேலும், இந்த அரசு தொடர்ந்து ஐந்தாவது முறையாக புதிய வரி ஏதுமில்லாத நிதிநிலை அறிக்கையினை தாக்கல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கீழ்க்கண்ட பொருட்களுக்கு மதிப்புக் கூட்டு வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டு உள்ளது:-

அ) மிளகு, சீரகம் மற்றும் சோம்பு ஆகியவற்றின் பொடி வகைகள் விற்பனை மற்றும் அதன் கொள்முதல் மீதான வரியிலிருந்து விலக்கு (விற்பனைத் தொகை வரம்பிற்குட்பட்டு )

ஆ) சோற்றுக் கற்றாழையினை பயன்படுத்தி, தயாரிக்கப்படும் பொருட்கள் (மொத்த வருட விற்றுமுதல் ரூ.1 கோடிக்கு மிகாமல் உள்ளபோது)

இ) வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சர்க்கரை (ஓராண்டு காலத்திற்கு மட்டும்)

ஈ) நகராட்சி திடக் கழிவிலிருந்து தயாரிக்கப்படும் எரிபொருட்கள்

உ) பாக்கு மர இலையில் தயாரிக்கப்படும் தட்டு, தொன்னை உள்ளிட்ட கோப்பை ஆகியவை

ஊ) குடிசைகள் மற்றும் சிறு வீடுகள் கட்ட பயன்படுத்தப்படும் பனஞ் சட்டங்கள்

எ) ஐஸ் கட்டிகள்

ஏ) ஜரிகை (பாலியஸ்டர் பிலிம் நூல் மற்றும் ரேடியன்ட் நூல் நீங்கலாக) (கொள்முதல் மற்றும் விற்பனைக்கு)

மேலும், சாதாரண மக்கள் பயன்படுத்தும் கீழ்க்கண்ட பொருட்கள் மீதான வரி 12.5 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது:-

- வணிகச் சின்னம் இடப்பட்ட காபித்தூள் (உடனடி காபித்தூள் தவிர)
- பெயிண்ட் பிரஷ்
- வணிகச் சின்னம் இடப்பட்ட இனிப்பு மற்றும் கார வகைகள்
- கத்தி, கத்தரிக்கோல் மற்றும் கைத்தையலுக்குப் பயன்படுத்தப்படும் ஊசிகள்

- வணிகச் சின்னம் இடப்பட்ட உடனடி உணவுப் பொருள்கள் (மாவு, பொடி மற்றும் ஈரமாவு வடிவில் உள்ளவை.)

மேற்குறிப்பிட்ட அனைத்து வரிச் சலுகைகளும் 1.4.2010 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

## 11. மதிப்புக் கூட்டு வரி செயல்படுத்தப்படுவதால் ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்தல்

2004-05 ஆம் ஆண்டினை அடிப்படை ஆண்டாக (Base Year) கொண்டு, 2005–06, 2006–07 மற்றும் 2007–08 நிதி ஆண்டுகளுக்கான வருவாயினை மதிப்பீடு செய்து, அதன் அடிப்படையில் மாநிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகையினை கணக்கிடுவதற்கு மத்திய அரசு சில வரம்புகளை நிர்ணயித்துள்ளன. அதன்படி, அவ்வாறு மதிப்பீடு (Estimate) செய்யப்பட்ட வருவாய்க்கும், உள்ளபடியான (Actual) வருவாய்க்கும் உள்ள வித்தியாசத்தில் 2005–2006, 2006–2007 மற்றும் 2007–2008 ஆகிய நிதி ஆண்டுகளுக்கு முறையே 100 விழுக்காடு, 75 விழுக்காடு மற்றும் 50 விழுக்காடு இழப்பீட்டுத் தொகை கிடைக்கும். நமது மாநிலத்தில் மதிப்புக் கூட்டுவரி 1.1.2007 முதல், அதாவது, இரண்டாம் நிதியாண்டான 2006–2007–ல்

நடைமுறைப்படுத்தப்பட்டதால் நமது மாநிலம் ஜனவரி 2007 முதல் மார்ச் 2007 வரையில் 75 விழுக்காடு அளவிற்கும், மூன்றாம் நிதியாண்டான 2007–2008 ஆம் ஆண்டிற்கு 50 விழுக்காடு அளவிற்கும் ஈட்டுத்தொகை பெற தகுதி பெற்றிருந்தது. இருப்பினும், இந்த அரசு 2007, 2008 மற்றும் 2009 ஆகிய ஆங்கில ஆண்டுகளுக்கு முறையே 100 விழுக்காடு, 75 விழுக்காடு மற்றும் 50 விழுக்காடு என்ற வகையில் இழப்பீடு வழங்குமாறு மத்திய அரசினைக் கேட்டுக் கொண்டது. அதன் அடிப்படையில், மத்திய அரசு, ஆங்கில ஆண்டு 2007 மற்றும் 2008–க்கு முறையே 75 விழுக்காடு மற்றும் 50 விழுக்காடு அளவிற்கு ஈட்டுத் தொகை வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது. அதன்படி, ஜனவரி, 2007 முதல் டிசம்பர், 2008 வரை நமது மாநிலத்திற்குச் சேரவேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூ.4,011.80 கோடியாகும். இதுவரையில் பெற்றுள்ள இழப்பீட்டுத் தொகை ரூ.3,040 கோடியாகும். எஞ்சியுள்ள இழப்பீட்டு தொகையான ரூ.971.80 கோடியை பெறுவதற்கு மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

## 12. மத்திய விற்பனை வரியை படிப்படியாகக் குறைத்தல்

மத்திய விற்பனை வரிச் சட்டம் 1956-ன் கோட்பாடுகளும், மதிப்புக் கூட்டு வரிச்

சட்டத்தின் கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று பொருந்தாதவையாகும். ஆகையால், இந்திய அரசு மத்திய விற்பனை வரியை படிப்படியாக நீக்குவது என முடிவெடுத்தது. அதன் அடிப்படையில், 1.4.2007 முதல் மத்திய விற்பனை வரி 4 விழுக்காட்டில் இருந்து 3 விழுக்காடாகவும், பின்னர், 1.6.2008 முதல் 3 விழுக்காட்டில் இருந்து 2 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டது. இவ்வாறு வரிவிகிதத்தை குறைத்ததால், 2007-08 மற்றும் 2008-09 நிதி ஆண்டுகளில் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பிற்காக 100 விழுக்காடு இழப்பீட்டுத் தொகை வழங்குவதாக மத்திய அரசு முடிவு எடுத்தது. 2007-08 மற்றும் 2008-09 நிதி ஆண்டுகளுக்கு மொத்தமாகக் கோரப்பட்ட இழப்பீட்டுத் தொகையான ரூ.2675.98 கோடியில், இதுவரை பெறப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ 1,147.54 கோடியாகும். 2007–08 மற்றும் 2008–09 ஆண்டிற்கு பெறப்பட வேண்டிய எஞ்சிய இழப்பீட்டுத் தொகை ரூ.1,528.44 கோடியாகும். 2009-2010 நிதி ஆண்டைப் பொருத்தவரையில், இழப்பீட்டுத் தொகைக்கான அளவு மாநிலத்துடன் கலந்தாலோசித்து மத்திய அரசால் முடிவு செய்யப்பட வேண்டியுள்ளது. இருப்பினும், 2009–2010–ஆம் ஆண்டிற்கு, ஏப்ரல், 2009 முதல் ஜனவரி, 2010 வரை ரூ.1,577.10 கோடி இழப்பீட்டுத் தொகை கோரப்பட்டுள்ளது. இதில் ரூ.259 கோடி மட்டும் சமீபத்தில் பெறப்பட்டுள்ளது. எஞ்சிய ரூ.1,318.10 கோடி பெறுவதற்கு மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

## 13. வணிகவரித் துறையை கணினிமயமாக்குதல்

இத்துறையை பல்வேறு வகையிலும் நவீனப்படுத்துவதற்கு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து வரிவிதிப்பு வட்டங்களுக்கும் நவீன அறைகலன்களும், இணையதள வசதியோடு கூடிய கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன. வணிகவரித் துறையில் கணினி செயல்பாடு 1973ஆம் ஆண்டு அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் துணையோடு தொடங்கப்பட்டது. இத்துறை தன்னுடைய தகவல் விவர மையத்தை 1988ஆம் ஆண்டு தொடங்கி, மாதாந்திர அறிக்கைகளை கணினியில் பதிவு செய்து, நிதி நிலை அறிக்கை தயாரிப்பதற்கான விவரங்களை ஆய்வு செய்து அரசுக்கு வழங்குகிறது. மேலும் நிதி ஆதாரங்களை திறம்பட பெருக்குவதற்காக இத்துறை 1998ஆம் ஆண்டு கள அலுவலர்களுக்கு கணினிகள் வழங்க நடவடிக்கை தொடங்கியது. 2003ஆம் ஆண்டில் அனைத்து அலுவலகங்களுக்கும் அந்தந்த அலுவலகங்களிலேயே விவரங்களை பதிவு செய்ய கணினிகள் வழங்கப்பட்டு, அவ்வாறு பதியப்பட்ட விவரங்களை, சென்னையில் உள்ள மைய கணினி மையத்திற்கு அனுப்புவதற்காக ஒரு பெரும் பரப்பு வலையமைப்பு (Wide Area Network) ஏற்படுத்தப்பட்டது. தற்போது இத்துறையில் வணிகப் பெருமக்களின் பயன்பாட்டிற்காக **www.tnvat.gov.in** என்ற இணையதளமும்,

துறை பயன்பாட்டிற்காக அகஇணையதளமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 13.1 மின் ஆளுமை

வணிகவரித் துறையில் மின் ஆளுமை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இணையம் மற்றும் துறை அகஇணையம் ஆகியவற்றின் மூலம் கீழ்க்கண்ட சேவைகள் வழங்கப்படுகின்றன:

### 13.1.1 வணிகர்கள் பதிவு

மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், **2006** மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், **1956–**ன் கீழ் பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கான மென்பொருள் இத்துறையினால் உருவாக்கப்பட்டு அனைத்து வரிவிதிப்பு வட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. வரி செலுத்துவோர் அடையாள எண் மற்றும் பதிவுச் சான்றிதழ் ஆகியன கணினி வாயிலாக மட்டுமே வழங்கப்படுகிறது. புதிய கிளை அலுவலகம், கிடங்கு மற்றும் தொழிற்சாலை பதிவு செய்தல் மற்றும் பதிவுச் சான்றில் பெயர் மாற்றம், முகவரி மாற்றம், போன்றவைகளும் கணினி வாயிலாகவே செய்யப்படுகின்றன. பதிவுச் சான்று பெறுவதற்கு விண்ணப்பம் செய்ய இணையதளத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவுச் சான்றிதழ் பெற விண்ணப்பம் செய்யும்போது நிரந்தரக் கணக்கு எண்ணையும் (Permanent Account Number – PAN) விண்ணப்பதாரர் அளிக்க வேண்டும் என

தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி விதிகளைத் திருத்தம் செய்து 19.04.2010 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஏற்கனவே பதிவு பெற்றுள்ள வணிகர்களும் மூன்று மாதங்களுக்குள் நிரந்தரக் கணக்கு எண்ணைத் துறைக்கு அளிக்க வேண்டும்.

### 13.1.2 மாதாந்திர அறிக்கைகளை சரிபார்த்தல்

மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் மாதாந்திர அறிக்கைகளை கணினியில் பதிவு செய்யும் பொருட்டு மென்பொருள் ஒன்று இத்துறையினால் தயாரிக்கப்பட்டு, அனைத்து வரிவிதிப்பு வட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. உதவி ஆணையர் முதல் ஆணையர் வரையிலான உயர் அலுவலர்கள் மாதாந்திர அறிக்கைகள் பதிவு செய்யப்பட்ட நிலையினை பார்த்து கண்காணிப்பதற்கு ஏதுவாக, வரிவிதிப்பு வட்டங்களில் பெறப்படும் மாதாந்திர அறிக்கைகள் உடனுக்குடன் கணினியில் பதியப்பட்டு, மத்திய சர்வர் கணினிக்கு மாற்றம் செய்யப்படுகிறது. அதே போல், கொள்முதல் மற்றும் விற்பனை பற்றிய விவரங்கள் கணினியில் பதியப்பெற்று, உள்ளீட்டு வரி வரவு தொடர்பான கோரிக்கைகள் வரிவிதிப்பு அலுவலர்கள் மற்றும் உயர்மட்ட அலுவலர்களால் குறுக்குத் தணிக்கை மூலம் சரிபார்க்கப்பட்டு வருகிறது. மேலும், கையால் எழுதி பராமரிக்கப்படும் காசோலைப் பதிவேட்டு முறை தவிர்க்கப்பட்டு, காசோலைப் பதிவு அதன் தொடர்பான வங்கியில்

செலுத்தும் படிவங்கள் தயாரிப்பது போன்ற செயல்பாடுகள் கணினி வாயிலாக நடைபெற்று வருகின்றன. மேலும், சுய வரிவிதிப்பு ஆணைகளை கணினி மூலம் உருவாக்கி அனுப்பிடவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

### 13.1.3 மின்னணு இணைப்புகள்

குறும்பரப்பு வலையமைப்பு (Local Area Network – LAN) இணைப்பு அனைத்து வரி விதிப்பு வட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வணிகவரித் துறையில் அனைத்து அலுவலகங்களுக்கும் இணைய அகலக்கற்றை (Internet Broad Band) இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. வணிகவரித் துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் ரூ.3.75 கோடி செலவில் தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பு TNSWAN) இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 13.1.4 அறிக்கைகளை மின்னணு வழி தாக்கல் செய்தல்

உள்ளீட்டு வரி வரவு திரும்பப் பெற விரும்பும் அனைத்து வணிகர்களும் மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின்கீழ் தாக்கல் செய்ய வேண்டிய மாதாந்திர அறிக்கைகளை www.tnvat.gov.in என்ற வலைதளம் மூலம்

மின்னணு முறையில் தாக்கல் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, சுமார் 1,80,000 வணிகர்கள், தங்களுடைய மாதாந்திர அறிக்கைகளை தாக்கல் செய்து வருகின்றனர். மேலும், அனைத்து வணிகர்களும் மின்னணு முறையில் கணக்கு அறிக்கைகள் தாக்கல் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 13.1.5 மின்னணு வழி வரி செலுத்துதல்

**www.tnvat.gov.in** என்ற வலைதளத்தின் வாயிலாக, நேரடியாக வரி செலுத்தும் வசதி பாரத ஸ்டேட் வங்கி மூலமாக அக்டோபர், 2009 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் சுமார் ரூ.1400 கோடி வரி இந்த முறையில் வணிகர்களால் செலுத்தப்படுகிறது.

### 13.1.6 விற்பனைக்குரிய படிவங்களைக் கேட்பதற்கான வசதி

வணிகர்கள் சட்டரீதியான படிவங்களை இணையதளம் மூலம் கேட்பதற்கும், அவற்றை வரிவிதிப்பு வட்டத்திலிருந்து பெறுவதற்கான நாளினை மின் அஞ்சல் மூலம் அறிவதற்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 13.1.7 ஏற்றுமதியாளர்கள் வரி திருப்புகை பெறுவதற்காக, கேட்பு படிவத்தைத் தாக்கல் செய்யும் வசதி

'பூஜ்ய வரி' விற்பனையில் (zero rated sales), உள்ளீட்டு வரி திரும்பக் கோரும் ஏற்றுமதியாளர்களுக்கு, படிவம் 'W' தாக்கல் செய்யும் நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சேவைக்கான இணையதள மென்பொருள் தேசியத் தகவல் மையத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் அமல்படுத்தப்பட்டபின், தற்போதைய நடைமுறையைக் காட்டிலும் விரைவாக ஏற்றுமதியாளர்களுக்கு வரித் திருப்புகை கிடைக்கும். வரித் திருப்புகையின் அவ்வப்போதைய நிலையினை இணையதளத்தின் வாயிலாக அறியும் வசதி உள்ளது. மேலும், வணிகர்கள் அலுவலகத்திற்கு நேரடியாக வர வேண்டிய தேவை மிகக் குறைவாக இருக்கும்.

### 13.1.8 சோதனைச் சாவடியில் விரைவு வழி அனுமதி முறை

பொருட்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் சோதனைச் சாவடிகள் அருகே அலுவலர்களால் சோதனை செய்யப்படுவதற்காக நிற்க வேண்டியுள்ளது. இதனால், முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும், பெறப்படும் அனைத்து விலைப் பட்டியல்களையும் குறுக்குத் தணிக்கை செய்யும் பொருட்டு கணினியில்

பதிவு செய்ய வேண்டியுள்ளதால் வேலைப்பளு மிகவும் அதிகரிக்கிறது. இந்த இடர்பாடுகளைத் தீர்ப்பதற்காக, மின்ஆளுகையின் ஒரு பகுதியாக, வணிகப் பெருமக்களுக்குப் பயன்படும் வகையில் வணிகவரித்துறையால் விரைவு வழி அனுமதி முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. இச்சேவையின் வாயிலாக, வணிகர்கள் தங்கள் வாகனங்களில் கொண்டு செல்லும் பொருட்கள் பற்றிய விவரங்களை www.tnvat.gov.in எனும் வலைதளத்தில் பதிவு செய்து, அதன்மூலம் பெறப்படும் ஒப்புகைச் சீட்டினை தங்கள் சரக்கு வாகனங்களில் கொண்டு செல்லலாம். அந்த ஒப்புகைச் சீட்டினை சோதனைச் சாவடி அலுவலர்களிடம் காட்டினால் விரைவாக அனுமதி பெறலாம். அதனை சோதனைச் சாவடி அலுவலர் வலைதளத்தில் பதிவு செய்து, கொண்டு செல்லும் பொருட்களை உறுதி செய்து கொள்ளலாம். இச்சேவை வாயிலாக, முறையாக பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்கள் சோதனைச்சாவடியில் விரைவு அனுமதி பெறுவதன் மூலம் வணிகர்களின் நேரம் சேமிக்கப்படுவதுடன் சோதனைச் சாவடிகளில் ஏற்படும் நெரிசலை குறைக்கவும் உதவும். மேலும், துறைக்குத் தேவையான விவரங்கள் எளிதாகக் கிடைக்கும்.

### 13.1.9 வரி செலுத்துவோருக்கான சேவைகளைச் செம்மைப்படுத்துதல்

வணிகப் பெருமக்களுக்காக கீழ்க்கண்ட வசதிகள் / சேவைகள் www.tnvat.gov.in என்ற வலைதளத்தில் செய்து தரப்பட்டுள்ளன:-

- சட்டங்கள், விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசு ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள் வெளியிடப்பட்ட உடனடியாக அறியும் வசதி.

- வணிகர் பற்றிய விபரங்கள், செலுத்திய வரி போன்ற விபரங்களை அறிய பேரேடு வசதி.

- பொருட்களின் அட்டவணை மற்றும் வரிவிகிதம் தெரிந்து கொள்ளும் வசதி.

- வரி செலுத்துவோர் அடையாள எண் அல்லது பெயர் மூலம் வணிகர்களின் முழு விவரங்களைத் தெரிந்து கொள்ளும் வசதி.

- வரிவிதிப்பு வட்டத்தில் வரித் திருப்புகை அளித்த விவரத்தினைப் பார்வையிடும் வசதி.

### 13.1.10 துறையின் அகஇணையம் (Intranet)

இத்துறையின் பெரும் பரப்பு வலையமைப்பு (TNSWAN) மூலம் ஏற்படுத்தப்பட்ட இந்த அகஇணையதளத்தில் சுற்றறிக்கைகள், ஆணைகள், அறிவிக்கைகள், தீர்ப்புகள், சட்டங்கள், விதிகள் ஆகியவை வெளியிடப்படுகின்றன. இந்த இணையத்தின் மூலமாக மின் அஞ்சல் செய்யும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. அலுவலகங்களில் பதியப்பட்ட விவரங்களின் அடிப்படையில், இவ்விணையதளம் மூலமாக மேலாண்மை அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

### 13.1.11 வரித் தகவல் பரிமாற்ற அமைப்பு (TINXSYS)

வரித் தகவல் பரிமாற்ற அமைப்பு (TINXSYS) என்பது அனைத்து மாநில வணிகவரித் துறைகளிடையே தகவல் பரிமாற்றம் செய்து கொள்வதற்கு ஏதுவாக, மாநில நிதி அமைச்சர்களைக் கொண்ட அதிகாரமளிக்கப்பட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டத் தீர்வாகும். இத்திட்டம், சலுகை வரி அடிப்படையில் மாநிலங்களுக்கிடையே விற்கப்படும் பொருட்களின் விவரங்களை சிறந்த முறையில் கண்காணிக்கப் பயன்படுகிறது. மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட படிவங்கள் மற்றும் வணிகர்களின் விவரங்களை சரி பார்க்க வணிகப் பெருமக்கள் மற்றும் வணிகவரித்துறை அலுவலர்கள்

இத்திட்டத்தினை பயன்படுத்தலாம். உதவியாளர்கள் முதல் அலுவலர்கள் வரை அனைவருக்கும் இத்திட்டத்தினை பயன்படுத்துவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அலுவலருக்கும் பயன்படுத்துபவர் பெயர் (user name) மற்றும் கடவுச் சொல் (password) வழங்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது, நமது மாநிலத்தில் இத்திட்டத்தின் கீழ் அதிக அளவில் விவரங்கள் தொகுக்கப்பட்டு பதியப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மற்ற மாநிலங்களைப் போல் அல்லாமல், இந்த செயல்பாடு நமது துறையிலேயே, வெளி நிறுவனங்கள் உதவி இல்லாமல், அரசுக்கு கூடுதல் செலவின்றி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

TINXSYS வலைதளங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

http://www.statevat.gov.in
http://www.tinxsys.com
http://www.vinxsys.com

மேலும், வணிகர் குறித்த விவரங்களை வரி செலுத்துவோர் அடையாள எண் (Tax Payer's Identification Number – TIN) வழியாக ''தகவல் பரிமாற்ற குரல் ஊடாடு அமைப்பு'' (Interactive Voice Response System) மூலமாக அறிந்து கொள்ளலாம். இதற்கான கட்டணமற்ற தொலைபேசி எண் 1800 2200 17.

வரித் தகவல் பரிமாற்ற முறையில், இடை மாநில வணிகத்தை மின் ஆளுகை மூலம் சிறப்பாகக் கண்காணிப்பதற்கு அனைத்து வரிவிதிப்பு வட்டங்களுக்கும் ‘இணைய அகலக்கற்றை’ (Internet Broadband) இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. வரித் தகவல் பரிமாற்ற அமைப்பும், மாநிலத்தில் மதிப்புக் கூட்டு வரிக் கணினி அமைப்பும் இணைந்து செயல்படுவதால் இடைமாநில வணிகத்தை கண்காணிக்க வசதியாக உள்ளது. மேலும், இந்த வரித் தகவல் பரிமாற்ற அமைப்பில் இடைமாநில வணிக விவரங்கள் தொடர்ந்து பதிவு செய்யப்படுவதால், ஏதேனும் விதி மீறல்கள் இருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## 14. குறிக்கோள் திட்டம் (Mission Mode Project)

இந்திய அரசின் வணிகவரித்துறை குறிக்கோள் திட்டமானது (MMP-CT) வணிகவரித் துறையில் நிர்வாகத்தினை சீராகவும், தரமானதாகவும் இருப்பதை உறுதி செய்வதற்காகவும், மேலும் எளிதான தகவல் பரிமாற்றத்திற்காகவும் தகவல் தொழில் நுட்ப உள்கட்டமைப்பு வசதியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசின் வணிகவரித்துறைக்கு மொத்தம் ரூ.47.89 கோடி மதிப்பிலான திட்டச் செலவினத்திற்கு மத்திய அரசு

ஏற்பளித்துள்ளது. இந்தத் திட்டச் செலவினம் மத்திய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படும். அதன் அடிப்படையில், மத்திய அரசின் பங்கு ரூ.32.52 கோடியும், மாநில அரசின் பங்கு ரூ. 15.37 கோடியும் ஆகும். மார்ச் 2010–ல் இந்திய அரசு அதன் பங்கில் முதல் தவணையாக ரூ.12.35 கோடி வழங்கியுள்ளது.

## 15. வரி கைவிடுதல் ஆய்வுக்குழு (Waiver Committee)

அரசாணை எண் 428, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 25.8.2006–ன்படி கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட வரி கைவிடுதல் ஆய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது :

1. அரசுச் செயலர், நிதித்துறை
2. அரசுச் செயலர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை
3. ஆணையர் (வணிகவரிகள்)

நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் தெளிவுரைகளால் வணிகர்கள் கொள்முதல் செய்வோர்களிடமிருந்து வரி வசூல் செய்யாத நிகழ்வுகளில், பல்லாண்டுகளாக நிலுவையில் உள்ள வரி கைவிடுதல் கருத்துருக்களை ஆய்வு செய்து, முடிவெடுப்பதற்காக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இது வரை மூன்று கூட்டங்கள் நடத்தப்பட்டு, 66 வரி கைவிடுதல் கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டு, 65 இனங்களில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## 16. நிலுவைகளைத் தள்ளுபடி செய்தல்

**1990-1991**–ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திற்கான நிலுவைத் தொகை ரூ.**98.71** கோடியை தள்ளுபடி செய்வதற்காகப் பரிசீலிக்கப்பட்டது. இதில் தண்டத்தொகை தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் **1959**-ன் கீழ் ரூ.**31.29** கோடியும், மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டம் **1956**-ன் கீழ் ரூ.**6.42** கோடியும் ஆக மொத்தம் ரூ.**37.71** கோடி அடங்கும். பல ஆண்டுகளாக துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும் நிறுவனங்களை மூடிய வணிகர்களிடமிருந்து இந்நிலுவைத் தொகைகளை வசூலிக்க சாத்தியக் கூறுகள் இல்லை. மேற்கண்ட சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு அரசாணை (நிலை) எண் **88**, வணிகவரி மற்றும் பதிவு(டி1)த்துறை, நாள் **10.10.2008**–ல், **1990–91**–ஆம் ஆண்டு வரையிலான தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், **1959** மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், **1956**–ன் கீழ் வசூலிக்க இயலாத நிலுவை வரி, உபரி வரி, கூடுதல் உபரி வரி, கூடுதல் வரி, தண்டத்தொகை மற்றும் வட்டி ஆகிய கேட்புத் தொகையினை தள்ளுபடி செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. இது, நீதிமன்றத்தில் வரிவிதிப்பு மற்றும் வரி வசூல் மீதான வழக்குகள் நிலுவையில் இல்லா இனங்கள், அசையா சொத்துக்கள் இல்லாத இனங்கள் மற்றும் **01.04.2002**க்கு முன் வணிகம் நிறுத்தப்பட்ட

இனங்கள் ஆகியவற்றிற்கு பொருந்தும். மேலும், வரி நிலுவைகளை தள்ளுபடி செய்வதற்கான அதிகாரம் மாவட்ட/சரக துணை ஆணையர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 17. ஒரே முறை தீர்வுத் திட்டம்

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956-ன் கீழ் அரசுக்கு சேரவேண்டிய வரி, தண்டம் மற்றும் வட்டி நிலுவை கணிசமான அளவு நீண்ட காலமாக வசூலிக்கப்படாமல் இருந்தது. இந்நிலையை கருத்திற் கொண்டு 31.03.2002 வரை கேட்பு எழுப்பப்பட்டு, அரசிற்கு சேரவேண்டிய வரி, அபராதம் மற்றும் வட்டி நிலுவைகளை செலுத்தித் தீர்ப்பதற்கு ‘‘ஒரே முறை தீர்வுத் திட்டம்’’ அறிமுகப்படுத்தப்பட்டு, தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகள் தீர்வு) சட்டம், 2008 இயற்றப்பட்டது. இச்சட்டம் 1.11.2008 முதல் 31.1.2009 வரையில் நடைமுறையில் இருந்தது. வணிகர்களின் கோரிக்கையை ஏற்று இத்திட்டம் 31.3.2009 வரை நீட்டிக்கப்பட்டது. மேலும், வணிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க, இத்திட்டம் 3.8.2009 முதல் 2.11.2009 வரை நீட்டிக்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் 10,250 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ரூ.85.39 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட இது போன்ற திட்டங்களின் மூலம் வசூல் செய்யப்பட்ட தொகைகளில் இதுதான் அதிகமானதாகும்.

## 18. வணிகர் நல வாரியம்

சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழ் நாட்டிலுள்ள அனைத்து வணிக பெருமக்களுக்கும் பயன் தரும் வகையில் **“தமிழ் நாடு வணிகர் நல வாரியம்”** **1989–**ஆம் ஆண்டில் அமைக்கப் பெற்று இயங்கி வருகிறது. வணிகர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு உருவாக்கப்பட்ட தமிழ் நாடு வணிகர் நல வாரியம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது:–

1. மாண்புமிகு தமிழக முதல்வர் – தலைவர்
2. மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் – துணைத் தலைவர்
3. அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்:–

   1) அரசுச் செயலர் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)
   2) வணிக வரி ஆணையர்
   3) அரசு சிறப்புச் செயலர் (நிதித் துறை)
   4) அரசுச் செயலர் (தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை)
   5) கூடுதல் ஆணையர்/முதன்மைச் செயல் அலுவலர், தமிழ் நாடு வணிகர் நல வாரியம் – (உறுப்பினர் செயலர்)

4. அலுவல் சாரா உறுப்பினர்கள் – 20 வணிகர்கள்

இவ்வாரியம் தொடங்கப்பட்டபோது, வணிகர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும் வாரியத்தின் நிர்வாக செலவினங்களுக்காகவும் ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகை பாரத ரிசர்வ் வங்கியில் (Reserve Bank of India) பதவி பெயர் வைப்புத் தொகைக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இக்கணக்கில் தற்போது, ரூ.2,07,76,182/- (ரூபாய் இரண்டு கோடியே ஏழு லட்சத்து எழுபத்தாறாயிரத்து நூற்று எண்பத்து இரண்டு மட்டும்) உள்ளது. இவ்வைப்புத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகை மற்றும் உறுப்பினர்களாக சேர்க்கப்படும் பதிவுப்பெற்ற வணிகர்களிடம் இருந்து ஆயுட்கால சந்தா தொகையாக வசூலிக்கப்படும் ரூ.250/– மற்றும் இச்சந்தா தொகைக்கு இணையாக அரசு ஆண்டுதோறும் அளிக்கும் மானியத் தொகை (Matching Grant) ஆகியவற்றிலிருந்து இவ்வாரிய உறுப்பினர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு, கீழ்க்காணும் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-

| நலத் திட்ட விவரம் | உதவித் தொகை பெறுவதற்கான தகுதி | வழங்கப்படும் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| அ) குடும்ப நலத் திட்டம் | உறுப்பினர்களுக்கு மரணம் ஏற்படின், அவரின் குடும்பத்திற்கு. | 50,000/- |
| ஆ) மருத்துவ உதவி | உறுப்பினர்களுக்கு, இருதய மாற்றுவழி அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைக்கு. | 50,000/- |
| | டயாலிசிஸ், கீமோதெரபி, ரேடியேஷன்தெரபி, ஆன்ஜியோபிளாஸ்டி ஆகியவற்றிற்கு. | 15,000/- |
| | –தொடர்ந்து அறுவை சிகிச்சை மேற்கொண்டால் | 25,000/- |
| | பெண் உறுப்பினர்களுக்கு கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு. | 20,000/- |
| இ) கல்வி உதவி | தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் ஆண்/பெண் குழந்தைகளில் ஒருவருக்கு கல்லூரி கல்விச் செலவிற்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | 5,000/- |
| | தொழிற் கல்வி பயில்வோருக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | 10,000/- |

| | | |
|---|---|---|
| ஈ) விளையாட்டு வீரர்களுக்கு உதவி | விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெறும் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு<br>( i) உலக அளவில்<br>( ii) தேசிய அளவில்<br>(iii) மாநிலஅளவில்<br>(iv) மாவட்ட அளவில் | <br><br>25,000/-<br>10,000/-<br>5,000/-<br>3,000/- |
| உ) தீ விபத்து – உதவி | உறுப்பினரின் கடைகள் தீ விபத்து மற்றும் இயற்கைச் சீற்றங்களால் சேதமடைந்தால் | 5,000/- |
| ஊ) மூன்று சக்கர சைக்கிள்கள் அல்லது பெட்டிக் கடைகள் வாங்க உதவி | நலிவுற்ற வணிகர்களுக்கான உதவி கோரி ஒவ்வொரு ஆண்டும் பெறப்படும் விண்ணப்பங்களில் முதல் 10 விண்ணப்பதாரர்களுக்கு | 10,000/- |
| எ) அதிக மதிப்பெண் பெறும் மாணவ மாணவியருக்கு ஊக்கத்தொகை | பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் வாரிய உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு<br>(i) முதலிடம்<br>(ii) இரண்டாவது இடம்<br>(iii) மூன்றாவது இடம் | <br><br>5,000/-<br>3,000/-<br>2,000/- |

## 18.1 இத்திட்டத்தில் பயனடைந்தவர் குறித்த விவரங்கள்

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில், ஏற்கெனவே இருந்த தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 மற்றும் தற்போது நடைமுறையில் இருக்கும் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006–ன் கீழ் பதிவு பெற்ற வணிகர்கள் மட்டுமே உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு வருகின்றனர். 31.03.2010 அன்று வாரியத்தில் உறுப்பினர் எண்ணிக்கை 45,719 ஆகும். இவ்வாரிய உறுப்பினர்களுக்கு தற்போது அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இது வரை 480 உறுப்பினர்களுக்கு ரூ.91.37 லட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயனடைந்தவர் குறித்த விவரங்கள் பின்வருமாறு :

| வ. எண். | நலத்திட்டம் | உதவி பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உதவித் தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | குடும்ப நல உதவி | 315 | 78.35 |
| 2 | மருத்துவ உதவி | 38 | 8.51 |
| 3 | கல்வி உதவி | 86 | 2.46 |
| 4 | தீ விபத்து உதவி | 29 | 1.45 |
| 5 | விளையாட்டு உதவி | 2 | 0.15 |
| 6 | உயர் மதிப்பெண் உதவி | 6 | 0.20 |
| 7 | உடல் ஊனமுற்றோர் உதவி | 2 | 0.15 |
| 8 | திருமண உதவி (தற்பொழுது நடைமுறையில் இல்லை) | 2 | 0.10 |
| | மொத்தம் | 480 | 91.37 |

### 18.2 வலைதளம்

தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்களும் பொதுமக்களும் இவ்வாரியம் அளிக்கும் சேவைகள் குறித்து எளிதில் அறிந்து கொள்ளும் பொருட்டு, www.tntwb.gov.in எனும் முகவரியில் வலைதளம் ஒன்று செயல்படுகிறது.

## 19. குறை களைதல்

### 19.1. குறை தீர்க்கும் பிரிவு

வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் குறைதீர்க்கும் பிரிவு ஒன்று **1999**–ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. வணிகர்களின் குறைகள் மற்றும் புகார்களைப் பெறுகின்ற பிரிவாக அது இயங்கி வருகின்றது. இணை ஆணையர் (நிர்வாகம்) அப்பிரிவின் தலைவராகவும், கூடுதல் ஆணையர் (மக்கள் தொடர்பு) மற்றும் கூடுதல் ஆணையர் (சுய சீராய்வு) ஆகியோர் அதன் உறுப்பினர்களாகவும் செயல்படுகின்றனர்.

### 19.2 தகவல் பரிமாற்றக் குரல் பதிவு ஊடாடு அமைப்பு (Interactive Voice Recording System)

துறையின் நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில், பொதுமக்களின் ஆலோசனைகள், குறைகள் மற்றும் வணிகர்களின் வரி ஏய்ப்பு விவரங்கள் குறித்த தகவல்களை உடனுக்குடன் பெறும் பொருட்டு, "தகவல் பரிமாற்றக் குரல் பதிவு ஊடாடு கருவி" வணிகவரி ஆணையர் அவர்களின் அலுவலகத்தில் செயல்பட்டு

வருகிறது. இவ்வசதிக்கென தனியாக 044–28520535 என்ற எண் கொண்ட நேரடி தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 20. வணிகவரித் துறையின் சிறந்த நிர்வாகத்திற்கென எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள்

### 20.1 வரி ஏய்ப்பு குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு வெகுமதி.

ரூ.1 லட்சம் தொகுப்பு நிதி ஒன்று உருவாக்கப்பட்டு, வரி ஏய்ப்பவர் பற்றிய பயனுள்ள தகவல்களை துறைக்கு அளிக்கும் துறைசாரா நபர்களுக்கு வணிகவரி ஆணையரால் பரிசுத் தொகை வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் பயனுள்ள தகவல்கள் செயலாக்கப் பிரிவினரால் பரிசீலிக்கப்பட்டு, முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, மேற்கொண்டு வரிவிதிக்கப்படுகிறது. தகவல் அளித்தவர் பற்றிய விவரங்கள் இரகசியமாக வைக்கப்படுவதுடன் அவருக்குத் தகுந்த வெகுமதியும் அளிக்கப்படுகிறது.

### 20.2 கைபேசி இணைப்பு வழங்குதல்

செயலாக்கப் பிரிவில் உள்ள துணை ஆணையர், இணை ஆணையர் மற்றும் சுற்றும்படை அலுவலர்களுக்கு வரி ஏய்ப்பு மற்றும் வாகன இயக்கம் குறித்த தகவல்களை பரிமாறிக் கொள்ள கைபேசி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது கூடுதல் ஆணையர்கள்,

இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் வரிவிதிப்பு வட்ட தலைமை அலுவலர்கள் அனைவருக்கும் 391 கைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால், அலுவலர்கள் தகவல் பரிமாற்றம், சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளுதல், வணிகர்களுக்கு இடையேயான பரிமாற்றங்கள் தொடர்பான விவரங்களை குறுக்குத் தணிக்கை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளலாம். வணிகப் பெருமக்களும் தங்களுடைய சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்வதற்காகவும், வணிக நடைமுறைகளை எளிய முறையில் நடைமுறைப்–படுத்துவதற்காகவும் வரிவிதிப்பு அலுவலர்களை நேரடியாக தொடர்பு கொள்வதற்கும் இது பயன்படும். மேலும், இது வணிகர்களுக்கான சேவைகளை மேம்படுத்தவும், வரி நிர்வாகத்தை திறம்பட நடத்தவும் பயன்படும்.

**20.3 புதிய வாகனங்கள் வழங்குதல்**

பழைய, கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக 32 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, உரிய அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**20.4. புதிய கட்டடங்கள் கட்டுதல்**

ஒசூரிலுள்ள வணிகவரி அலுவலகங்களுக்காக ரூ.154 இலட்சம் செலவில் புதிய அலுவலகக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. மதுரையில் பயிற்சி மையம் ஒன்றும், கூட்ட அரங்கு ஒன்றும் ரூ.40 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. சேலத்தில் உள்ள வணிகவரி அலுவலகங்களுக்கான ஒருங்கிணைந்த அலுவலகக்

கட்டடம் கட்டும் பொருட்டு, சேலம், அஸ்தம்பட்டியில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான **63,162** சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் வணிகவரித்துறைக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**20.5. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005**

**1.1.2009** முதல் **31.12.2009** வரையிலான கால அளவில், தகவல் அறியும் உரிமைச் சட்டம்–**2005**–ன் கீழ் **241** விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அனைத்து விண்ணப்பங்களின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

**20.6. பகுதி II திட்டம் 2010–2011**

**2010–2011**ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின் கீழ் பல்வேறு வணிகவரி அலுவலகங்களுக்கு அறைகலன்கள், நகலெடுக்கும் இயந்திரங்கள், மின்னணு நகல் இயந்திரங்கள், தொலைபேசிகள், மின் ஆக்கிகள் போன்றவற்றை வழங்கவும், வணிகவரி பணியாளர் பயிற்சி மையம் மூலம் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கவும் ஆக மொத்தம் ரூ.**50** இலட்சத்திற்கான புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**திரு சி.நா.மீ. உபயதுல்லா**

வணிகவரித்துறை அமைச்சர்